முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1268

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.03.2023, திங்கட்கிழமை**

1. அறமாக வாழுகின்ற அரங்கனே
ஆற்றலாக உலகோர்க்கு தர்மபலம்
மாற்றமெனக் கூறி வகைநடத்துகின்ற
மாதவராஜனே தேசிகனே உந்தனுக்கு
2. உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
**(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 06 ம் நாள், 20.03.2023, திங்கட்கிழமை)**
ஆசிதந்து அரங்கன் நீ உலகோரை
ஆற்றல்பட அறத்தின்பால் ஈர்த்துவர
3. வருகின்ற இந்த பலம் வையகம் எங்கும்
வள்ளல் தன்மையாக நிலைத்து நின்று
தருகின்ற குணத்தை உலகோர்க்கு
தவமாக மாற்றி அரங்கன் உன் செயலாலே
4. செயலாலே உலகெல்லாம் சேவையாக
செயலாலே உலகெல்லாம் தர்மமாக
தயவாக மக்களிடை பெருகிபெருகி
தரணியே தர்மலோகமாகுமப்பா
5. ஆகும்தொட்டு உலகமெல்லாம் ஞானவான்கள்
ஆற்றலாகப் பெருகி ஞான ஆட்சி
மிகைபட அரங்கன் உன் கருணையாலே
மேன்மையுள காலமாக மாற்றம் பெறும்
6. மாற்றம் தரும் ஒரே தவசி அரங்கன் நீ
மக்களைக் காக்கும் மகா தயவு கொண்டவன் நீ
தேக்கமின்றி உன் தொடர்பு உலகோர்க்கு
தொண்டாக கொண்டால் போதும் இனிதே இனி
7. இனிமாற்றம் ஞான ஆட்சிக்காலமாக
இனிமாற்றம் ஞானவான்கள் கையில் தொடர்பாக
உற்றதொரு சடுதி நிகழ்வு கண்டு
உயர்வாக உலகமே தேற்றங்காணும்
8. காணவே அரங்கன் உன் தொடர்பு
கலியுகத்தாருக்கு அவசியம் அவசியமப்பா
நண்மைபட ஆன்மீக வழிகாட்டும்
உயர்குரு உன்னை தொட்டுவிட்டால்

9. தொட்டவர்க்கு கர்மவினை தொலைந்தோடும்
தொட்டவர்க்கு நன்மை தரும் ஞானபலம்
தட்டாது சித்திக்கும் கலியுகத்தில்
தவசிஉன்னால் கலியுகமே ஞானயுகமாக மாறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–